Registered as a News Paper
பக்கங்கள்: 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 28 (12-01-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 328

## ஆசிரியர்களுக்கு புலமைப் பரிசில்

ஆசிரியர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. பாடசாலைகளில் ஒவ்வொரு பாடநெறிகளிலும் துறைசார்ந்த பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களைத் தேர்ந்து எடுத்து ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமொன்றைக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளதாக அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இப்புலமைப் பரிசிலுக்குத்தெரிவு செய்யப்படுவோர் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமெனவும் (4 -ம் பக்கம் பார்க்க)

### தமிழ் நாட்டுச் சிறையில் வாடும் விடுதலைப் புலிகள்

# ஜெனிவா செஞ்சிலுவை தலைமையகம்

# இந்திய மத்திய அரசுடன் பேசும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டுச் சிறைகளில் வாடும் விடுதலைப் புலிகளின் நிலை குறித்து ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் கவலை கொண்டிருப்பதாகவும், இவ் விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசவிருப்பதாகவும் தெரியவருகிறது. விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த கோரிக்கையைத்தொடர்ந்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளைத் தமிழ்நாட்டுக் காவற் துறையினர் கைது செய்து ஒரு வருடத்திற்கு மேலாகச் சிறையில் தடுத்து வைத்திருப்பது தெரிந்ததே.

**தி.மு.க ஆட்சிகால**

இவர்களில் பெரும்பாலானோர் போரில் காயமடைந்து சிகிச்சைக்காகத் தமிழ்நாடு சென்றவர்களாவர். அன்றைய இந்திய மத்திய அரசினதும் (வி. பி. சிங் அரசு), தமிழ் நாட்டு அரசினதும் (தி. மு. க அரசு) அனுமதியின்பேரிலேயே இந்தப் போராளிகள் தமிழ் நாடு சென்றனர். இவர்களில் பலர் அங்கவீனர்கள், உடல் செயலிழந்தவர்கள், கண் பார்வையற்றவர்கள். இவர்கள் கருணாநிதியின் ஆட்சிக் காலத்திலிருந்தே கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் தள்ளப்பட்டுச் சித்திரவதைக்கும் மற்றும் பல கொடுமைகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இவ்வாறு சிறையில்வாடும் போராளிகளின் விபரங்களை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்ததோடு அவர்களது நலன்களைப் பேணுமாறுகேட்டிருந்தனர். இதனைத்தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் சிறையில் உள்ள போராளிகளின் நிலைமை குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளது,

## ருமேனியாவில் 6 இல. தமிழர் கைது

(புகாரஸ்)

ருமேனிய புகாரஸ் விமான நிலையத்தில் 6 தமிழர்கள் போலி பிரயாணப் பத்திரங்களுடன் பிடிபட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண்கள்.

கல்கத்தாவிலிருந்து போலி பிரயாணப்பத்திரங்களுடன் பிரயாணமாகிய இவர்கள் ருமேனிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் பிடிபட்டனர்

இவர்கள் மீண்டும் கல்கத்தாவிற்கு திருப்பி அனுப்பப்படுவர்.

## களுவாஞ்சிக்குடியில் ஒரு ரெலோ பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிலிருந்து 75 யார் தூரத்தில் வைத்து தேசவிரோதிகளின் கும்பலொன்றின்மீது விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் ஒரு தேசவிரோதி பலியானார். மற்றொருவர் காயமடைந்தார், இச் சம்பவம் கடந்த ஒன்பதாம் திகதி பகல் 10·00மணியளவில் நடைபெற்றது

வாகனமொன்றில் வந்த விடுதலைப்புலிகளின் அணியொன்று இத்திடீர்த் தாக்குதலை நடத்தியது.

## இரகசியப்பொலிஸ் தலைவர் பதவியிலிருந்து நீக்கம்

(சென்னை)

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சியின்போது இரகசியப் பொலிஸ்பிரிவுக்கு தலைவராக இருந்த ஜாபர் அலி அவரது பதவியிலிருந்து தற்காலிகமாக இடை நீக்கம் செய்துவைக்கப் பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்குஉதவி புரிந்து தமது கடமையிலிருந்து தவறியுள்ளார் என்ற குற்றத்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# 10 தமிழ்க் கிராமங்கள் சிங்களவரால் ஆக்கிரமிப்பு

## தமிழ் மக்கள் விரட்டியடிப்பு

திருக்கோணமலை - மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமங்களில் வசித்த தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு அவ்விடங்களில் சிங்களவர்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஈச்சிலம்பத்தை, கிளிவெட்டி, தோப்பூர் ஆகிய கிராமங்களில் வசித்து வந்த தமிழர்கள் கடந்த வருடம் விரட்டியடிக்கப்பட்டனர். தற்பொழுது அவ்விடங்களில் சிங்களக்குடியேற்றம் மேற்கொள்

பிரயோகங்கள் மூலம் அவ்விடங்களிலிருந்து தமிழ் மக்கள் காடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். அதனையடுத்து நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டபின் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். கடந்த வருடம் 10க்கு மேற்பட்ட தமிழ்க் கிராமங்கள் சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டன.

(3ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்தின் இறைமை; தமிழர் உரிமை காப்போம்

### - தொண்டமாண்

''தமிழர் உரிமையை வென்றெடுப்பதுடன் தேசத்தின் இறைமையையும் பாதுகாப்போம்'' என அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனாதிபதி

தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

## வீரச்சாவு

2 ஆம் லெப். தீபன்,

## ஆயுத விற்பனைத் தடையை பிரிட்டன் நீக்கவில்லை

### தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)

கொழும்பில் பிரித்தானியத்

# இந்திய மத்திய அரசுடன் பேசும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டுச் சிறைகளில் வாடும் விடுதலைப் புலிகளின் நிலை குறித்து ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் கவலை கொண்டிருப்பதாகவும், இவ் விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசவிருப்பதாகவும் தெரியவருகிறது. விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த கோரிக்கையைத்தொடர்ந்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளைத் தமிழ்நாட்டுக் காவற் துறையினர் கைது செய்து ஒரு வருடத்திற்கு மேலாகச் சிறையில் தடுத்து வைத்திருப்பது தெரிந்ததே.

**தி.மு.க ஆட்சிகால**

இவர்களில் பெரும்பாலானோர் போரில் காயமடைந்து சிகிச்சைக்காகத் தமிழ் நாடு சென்றவர்களாவர். அன்றைய இந்திய மத்திய அரசினதும் (வி. பி. சிங் அரசு), தமிழ் நாட்டு அரசினதும் (தி. மு. க அரசு) அனுமதியின்பேரிலேயே இந்தப் போராளிகள் தமிழ் நாடு சென்றனர். இவர்களில் பலர் அங்கவீனர்கள், உடல் செயலிழந்தவர்கள், கண் பார்வையற்றவர்கள். இவர்கள் கருணாநிதியின் ஆட்சிக் காலத்திலிருந்தே கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் தள்ளப்பட்டுச் சித்திரவதைக்கும் மற்றும் பல கொடுமைகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இவ்வாறு சிறையில்வாடும் போராளிகளின் விபரங்களை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்ததோடு அவர்களது நலன்களைப் பேணுமாறுகேட்டிருந்தனர். இதனைத்தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் சிறையில் உள்ள போராளிகளின் நிலைமை குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளது,

## இரகசியப்பொலிஸ்தலைவர் பதவியிலிருந்து நீக்கம்

(சென்னை)

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சியின்போது இரகசியப் பொலிஸ்பிரிவுக்கு தலைவராக இருந்த ஜாபர் அலி அவரது பதவியிலிருந்து தற்காலிகமாக இடை நீக்கம் செய்துவைக்கப் பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்குஉதவி புரிந்து தமது கடமையிலிருந்து தவறியுள்ளார் என்ற குற்றத்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## தேசத்தின் இறைமை; தமிழர் உரிமை காப்போம்

**- தொண்டமாண்**

''தமிழர் உரிமையை வென்றெடுப்பதுடன் தேசத்தின் இறைமையையும் பாதுகாப்போம்'' என அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனாதிபதி செயலகத்தில் முன்னால் நடைபெற்ற சேர் பொன். அருணாசலம் அவர்களின் நினைவு தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய பிரச்சினைகள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பல இடங்களில் இன்று மீட்புநிதி செலுத்த ஏற்பாடு

(நமது நிருபர்)

இன்று ஞாயிற்றுக்கிழமை (12-1-92) கீழ்க்காணும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழீழ மீட்புநிதி திரட்டப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அ. அ. பிரிவுகளில் உள்ளோருக்கு காலை 9.00 மணிக்கும் மு. பகல் 10.00 மணிக்குமிடையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பெறப்படவுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

**2 ஆம் லெப். தீபன், சுபராஜ்**

மட்டக்களப்பு மாவட்டம் காக்காச்சி வெட்டை என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரண்டு வீரவேங்கைகள் வீரச்சாவை எய்தினர்.

2 ஆம் லெப். தீபன் (வைத்திலிங்கம் தங்கவேல், 35 ஆம் கிராமம் மட்டக்களப்பு), வீரவேங்கை சுபராஜ் (அழகப்போல் தயானந்தலிங்கம் தாமரைக்கேணி, காக்காச்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் ஒரு ரெலோ பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிலிருந்து 75 யார் தூரத்தில் வைத்து தேசவிரோதிகளின் கும்பலொன்றின்மீது விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் ஒரு தேசவிரோதி பலியானார். மற்றொருவர் காயமடைந்தார், இச் சம்பவம் கடந்த ஒன்பதாம் திகதி பகல் 10·00மணியளவில் நடைபெற்றது

வாகனமொன்றில் வந்த விடுதலைப்புலிகளின் அணியொன்று இத்திடீர்த் தாக்குதலை நடத்தியது.

## ரூமேனியாவில் 6 இல. தமிழர் கைது

(புகாரஸ்)

ரூமேனிய புகாரஸ் விமான நிலையத்தில் 6 தமிழர்கள் போலி பிரயாணப் பத்திரங்களுடன் பிடிபட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண்கள்.

கல்கத்தாவிலிருந்து போலி பிரயாணப்பத்திரங்களுடன் பிரயாணமாகிய இவர்கள் ரூமேனிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் பிடிபட்டனர்

இவர்கள் மீண்டும் கல்கத்தாவிற்கு திருப்பி அனுப்பப்படுவர்.

## 10 தமிழ்க் கிராமங்கள் சிங்களவரால் ஆக்கிரமிப்பு

**தமிழ் மக்கள் விரட்டியடிப்பு**

திருக்கோணமலை - மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமங்களில் வசித்த தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு அவ்விடங்களில் சிங்களவர்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஈச்சிலம்பத்தை, கிளிவெட்டி, தோப்பூர் ஆகிய கிராமங்களில் வசித்து வந்த தமிழர்கள் கடந்த வருடம் விரட்டியடிக்கப்பட்டனர். தற்பொழுது அவ்விடங்களில் சிங்களக்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சியான இராணுவ சுற்றிவளைப்பு, துப்பாக்கிப் பிரயோகங்கள் மூலம் அவ்விடங்களிலிருந்து தமிழ் மக்கள் காடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். அதனையடுத்து நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டபின் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். கடந்த வருடம் 10க்கு மேற்பட்ட தமிழ்க் கிராமங்கள் சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டன.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதவிற்பனைத் தடையை பிரிட்டன் நீக்கவில்லை

**தூதரக அதிகாரி தகவல்**

(கொழும்பு)

சிறிலங்காவிற்கான பிரிட்டனின் ஆயுத விற்பனைமீதான கட்டுப்பாடுகள் இன்னும்தளர்த்தப்படவில்லை என்று கொழும்பில் பிரித்தானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமையாளர், பொலிஸார் பதுளையில் நேற்று கொலை

**புலிகள் கைவரிசை என்கிறது பாதுகாப்புவட்டாரம்**

(கொழும்பு)

பதுளையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் ஒன்றில் பொலிசார் ஒருவரும் தேயிலைத் தொழிற்சாலை முகாமையாளர் ஒருவரும் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டது புலிப்படையினர் தான் என்று கொழும்பில் இராணுவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புலிகள் தமது தாக்குதல்களை இப்போது மத்திய மலைநாட்டுப் பகுதிக்குத் திருப்பியிருப்பதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தோட்டத்தில் சம்பளமும் முழுமையாகக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலைப் புலிகள் தான் நடத்தினார்கள் என்ற செய்தி சிலரால் ஒரு வதந்தியாகப் பரப்பப்பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு பி. பி. ஸி. நிருபர் கிறிஸ் மொறிஸ் தெரிவித்தார்.

## துவேசத்தை கிளறுவதில் காமினி ஜெயசூரியா தீவிரம்

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இனத்துவேசத்தை கிளப்பக் கூடிய வகையில் தென்னிலங்கையில் பெரியளவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சுவரொட்டிகளில் பெரும்பாலானவை மலையக தமிழ் மக்களுக்கு எதிராகவும், கேலி செய்தும் ஒட்டப்பட்டவையாகும். மேலும் அமைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியிலிருந்து அனுரா வெளியேற்றப்படுவார்?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டியோடு எதுவித ஆலோசனையும் கலக்காமல் தனது இஷ்டப்படி கட்சிக் கூட்டங்களை நடாத்துவதிலும் கட்சி அலுவல்களை கவனிப்பதிலும் அநுரா பண்டாரநாயக்கா மும்முரமாகஈடுபட்டு வருகின்றார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கமிட்டியின் ஆலோசனைகளை பெறாமல் அவர் செயற்பட்டதனால் அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவாரா எனவும் சந்தேகம்எழுப்பப்பட்டுள்ளது.

மேலும் மகியங்கனை வர்த்தகரும் சு. க. பிரமுகருமான பிரேமரத்ன கமிஹேயின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு போகம்பரைச் சிறையில்வைக்கப்பட்டிருக்கும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர் விவகாரம்; பிரிட்டன் மத்தியஸ்தம்

(இஸ்லாமாபாத்) காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கெனத் பேக்கர் தெரிவித்துள்ளார் கடந்த வியாழன் ஒரு நாள் விஜயமாக இஸ்லாமாபாத்திற்கு சென்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.


## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த 04-01-92 சனிக்கிழமை பி. ப. 4.30 மணியளவில் திருநெல்வேலிசந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் ஆடியபாதம் வீதியில் புகைப்படங்கள் அடங்கிய ''சிறிய அல்பம்'' ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அதை ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2091)



இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும் பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

❋ அழகு மிளிரும் வர்ணவேலைகளா

❋ ஆங்கில தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய

நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

*New Era Publications*

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இ/3


## இந்துசமயத்தை சிங்கள மொழியிலாவது போதிக்க ஒழுங்கு செய்க

(கண்டி)

''சிங்கள மொழியிலாவது இந்துசமய பாடம் போதிக்க வழி செய்து தாருங்கள்'' இவ்வாறு மலையகத்தைச் சேர்ந்த இந்துதமிழ் மாணவர்கள் குழு இந்துசமய இராஜாங்கஅமைச்சர் பி. பி. தேவராஜை கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி மலையகத்தைச் சேர்ந்த மாணவர்குழுவினர், சிங்களத்தில்இஸ்லாம் போதிப்பது போல சிங்கள மொழியிலாவது இந்துசமயம் கற்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

தமிழும் சைவமும் பிரிக்க முடியாதவை. சைவத்தை பேணுவதற்கென்றே மலையகத்தைச் சேர்ந்த ஓர் இராஜாங்க அமைச்சர் உள்ளார். ஆனால் மலையகத்தைச் சேர்ந்த இந்து தமிழ் மாணவர்களுக்கோ இந்துசமயத்தை பயில முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண மாநகரசபை

### பொதுமக்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

யாழ். நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் சுகாதார சீர்கேடுகளை விளைவிப்போர் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 500/-க்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகரசபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. கழிவு நீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டிடங்களை நிர்மாணித்தல்.
02. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்.
03. வெற்றுக் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல், நீர்தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருட்களைக் குவித்து வைத்திருத்தல், குண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.
04. நாய், ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை கட்டாக்காலியாக அலையவிடுதல். (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 10-01-1992.

(சி/3773)

## 6-ம் மாத நினைவஞ்சலி



ஈழ விடுதலைக்காய் மலர்வு

2 . 12 . 1975

ஈழ விடுதலைப்பாதையில் மடிவு

16 . 7 . 1991

### லெப்டினனட் வினோத்

(மோகன்தாஸ் சுரேஷ் நிரஞ்சன்)

(மயிலிட்டி)

அந்தியேட்டி - 12 . 1 . 1991

புன் சிரிப்பையும் புன்னகையையும் காட்டி
எம்மை மகிழ்வித்தாய் உன் மழலைப் பொழுதில்
மழலை மாறு முன்பே மண்ணுக்காய் உன்
உதிரத்தை சிந்தி, பெற்ற நாம் உனைக் காணாது
பெறப்போகும், தியாகத் தலைவனின் வீரமிகு
பாதையில்முற்று முழுதாய் உனை அர்ப்பணித்துவிட்டாய்
நீ இன்று எம்மை விட்டு எம்மை காணாது
மறைந்து விட்டாய். ஆனால் உன் மறைவு உனைப்
போல் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களின் கொழுந்து
விட்டு எரியும் உணர்ச்சித் தீயாய்
தீரமிகு தலைவனின் மாறாத இலட்சியப் பாதையின்
விடிவு நட்சத்திரங்களாய் அமையட்டும்
நம் மண் எமக்கே அமையட்டும்

அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கை

(சி/3771)

## 180வது நாள் நினைவஞ்சலி



12 - 01 - 1973

இன்று உன் மழலைத் திருமுகம் எங்கள் சதீஸ்கரன்

13 - 07 - 1991

நாளை உன் வெற்றித் திருமுகம் தமிழீழத்தின் டக்ளஸ்

### கப்டன் டக்ளஸ்

(செல்வன் சதீஸ்கரன்)

[ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்]

மானிப்பாய் மழலையாய் வாழ்ந்தாய் மகனே
வடமராட்சியில் வேங்கையாய் திகழ்ந்தாய் டக்ளஸ்
எதிரிகளை அழிக்க களம் பல புகுந்தாய்
ஆனையிறவுத் தளத்திலே உன் குருதி சிந்த
உயிர் நீத்தாய் எம் செல்வமே
உம்மை ஒரு கணப் பொழுதும் மறவோம் சதீஸ்

இவரின் அந்தியேட்டிக்கு யாவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
தாய், சித்தப்பா (யோகராசா) சகோதரர்கள், சகோதரிகள், மற்றும் மாமா, மாமி, மைத்துனர்கள், சித்தப்பாமார், அன்ரிமார், சித்தி

நல்லதம்பி ஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

(2093)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

நினைவு

யாழ்ப்பாண மாநகரசபை

## பொதுமக்களுக்கு

# ஓர் முக்கிய அறிவித்தல்

யாழ். நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் சுகாதார சீர்கேடுகளை விளைவிப்போர் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 500/- க்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகரசபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. கழிவு நீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டிடங்களை நிர்மாணித்தல்.
02. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்.
03. வெற்றுக் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல், நீர்தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருட்களைக் குவித்து வைத்திருத்தல், குண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.
04. நாய், ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை கட்டாக்காலியாக அலையவிடுதல். (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 10-01-1992.

(சி/3773)

---

# 6-ம் மாத நினைவஞ்சலி



ஈழ
விடுதலைக்காய்
மலர்வு
2 . 12 . 1975

ஈழ
விடுதலைப்பாதையில்
மடிவு
16 . 7 . 1991

## லெப்டினனண்ட் வினோத்

(மோகன்தாஸ் சுரேஷ் நிரஞ்சன்)

(மயிலிட்டி)

அந்தியேட்டி - 12 . 1 . 1991

புன் சிரிப்பையும் புன்னகையையும் காட்டி
எம்மை மகிழ்வித்தாய் உன் மழலைப் பொழுதில்
மழலை மாறுமுன்பே மண்ணுக்காய் உன்
உதிரத்தை சிந்தி, பெற்ற நாம் உனைக் காணாது
பெறப்போகும், தியாகத் தலைவனின் வீரமிகு
பாதையில்முற்று முழுதாய் உனை அர்ப்பணித்துவிட்டாய்
நீ இன்று எம்மை விட்டு எம்மை காணாது
மறைந்து விட்டாய். ஆனால் உன் மறைவு உனைப்
போல் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களின் கொழுந்து
விட்டு எரியும் உணர்ச்சித் தீயாய்
தீரமிகு தலைவனின் மாறாத இலட்சியப் பாதையின்
விடிவு நட்சத்திரங்களாய் அமையட்டும்
நம் மண் எமக்கே அமையட்டும்

அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கை

(சி/3771)

---



12 - 01 - 1973
இன்று உன் மழலைத்
திருமுகம் எங்கள்
சதீஸ்கரன்

13 - 07 - 1991
நாளை உன் வெற்றித்
திருமுகம் தமிழீழத்தின்
டக்ளஸ்

## கப்டன் டக்ளஸ்

(செல்வன் சதீஸ்கரன்)

[ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்]

மானிப்பாய் மழலையாய் வாழ்ந்தாய் மகனே
வடமராட்சியில் வேங்கையாய் திகழ்ந்தாய் டக்ளஸ்
எதிரிகளை அழிக்க களம் பல புகுந்தாய்
ஆனையிறவுத் தளத்திலே உன் குருதி சிந்த
உயிர் நீத்தாய் எம் செல்வமே
உம்மை ஒரு கணப் பொழுதும் மறவோம் சதீஸ்

இவரின் அந்தியேட்டிக்கு யாவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
தாய், சித்தப்பா (யோகராசா) சகோதரர்கள், சகோதரிகள், மற்றும் மாமா, மாமி, மைத்துனர்கள், சித்தப்பாமார், அன்ரிமார், சித்தி

நல்லதம்பி ஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

(2093)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
25-12-1967

வீரச்சாவு
23-12-1990

## லெப்ரினன்ட் ராஜன்

(சிவஞானசுந்தரம் குகதாசன்)

திதி 12-01-1992

செந்தமிழ் அடிமைகொள்வதோ - இங்கு
சிங்களம் தங்க விடுவதோ என
செங்களம் ஆடி வெம்பகை ஓட்டியே
வேங்கை வீரனாய் நின்றவன்
மாவட்டபுரம் தன்னில் சரித்திரப் போரினில்
களத்தில் மாவீரனாய் நின்றவன்

உமது பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
நண்பர்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,

(சி 3770)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
25-6-1941

விண்ணில்
13-12-1991



## திருமதி ஞா. சிவக்கொழுந்து

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''
விண்ணிலே விரைவாகப் புகுந்துவிட்டாய் — அம்மா
வேதனையில் வாடுகிறோம் உனை இழந்து
தவிக்கும் எங்களுக்கு ஆறுதலாய்
தற்பரனை வேண்டியே பார்ப்பாயம்மா

இவரது மறைவினால் துயருறும்
அன்புக்கணவர் ஞானமுத்து
(இலங்கைத்துறைமுக அதிகாரசபை
திருக்கோணமலை)
பிள்ளைகள் ஞா.ஜெபநேசன் சியாமளா
மஞ்சுளா, சர்மிளா,
உறவினர்கள்.

அளம்பில்
மணலாறு.

(2049)

---

# நினைவு கூருகின்றோம்

## 1992-01-12

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் நீர்வேலியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**ஜெயந்தன், சின்ன அருணா** [செல்லச்சாமி தணிகேசன் - இல 39, இராச வீதி. கல்வியங்காடு]

1989 ஆம் ஆண்டு முட்டுச் சேனையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**2 ம் லெப். சின்னவன்** [தம்பிராசா கனகரத்தினம் - பூநகர், திருக்கோணமலை]

1991 ஆம் ஆண்டு குப்பிளானில் பலாலி சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**மதனி** [கமலநாயகி செல்வராசா - ஆலையடி வீதி, வந்தாறு மூலை, மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி-3766)

### சிந்தனைக்கு

மென்மை பலனளிக்காத போது, கண்டிப்பும் கடுமையும் அனுமதிக்கப்படலாம்.

— பியேர் கொர்னேய்ல்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 12-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# உதவியைநிறுத்துவது அதற்குரிய ஒரே வழி

மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளா அல்லது போருக்கான டாங்கிகளா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் விசேட ஆலோசகர் மாஹூப் உல்ஹக் அண்மையில் மணிலாவில் செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

மாஹூப் உல்ஹக்கின் கூற்று சிறிலங்காவைப் பொறுத்து மிகவும் ஏற்புடையதொன்றாகும். கல்விச் செலவீட்டிற்கென மூன்று வீதத்தை ஒதுக்கும் சிறிலங்கா பாதுகாப்புச் செலவிற்கென 15 வீதத்திற்குமேல் ஒதுக்கியுள்ளது.

இவ்வார ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான முன்னோடி மாநாட்டில் கீழ்காணும் விவகாரங்கள் சுட்டிக் காட்டப்பட்டன. கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் சிறிலங்காவின் பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லை எனவும், மனித உரிமைகளுக்கான சட்டங்கள் உறுதியாக காணப்படவில்லை என்பனவும் சுட்டிக்காட்டப்பட்டன. சிறிலங்காவின் இராணுவச் செலவீட்டைக் குறைக்குமாறும் அரசியற் தீர்வைக் காணுமாறும் வற்புறுத்தப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக 1990 ஆம் ஆண்டிலும் உதவி வழங்கும் நாடுகளின் பரிஸ் மாநாட்டில் சிறிலங்காவிற்கு கடும்ஆட்சேபம்தெரிவிக்கப்பட்டது.ஆனால் அவ்வாண்டு சிறிலங்காவிற்கு வழங்கப்பட்ட உதவியின் அளவு குறையவில்லை. 1989 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதைவிடச் சற்று அதிகமாகவே வழங்கப்பட்டது.

ஆட்சேபம் தெரிவித்துவிட்டு அதிகரித்த உதவியையும் வழங்கியமையால் உதவி வழங்குபவர்களின் ஆட்சேபத்தை சிறிலங்கா பெரிதாக மதிக்கவில்லை. அதேவேளை அவர்களின் ஆட்சேபத்திற்கு எதிரான நடவடிக்கைகளையே சிறிலங்கா மேற்கொண்டது. 1991 ஆம் ஆண்டிற்குப் பாதுகாப்புச் செலவிற்கென 1178 கோடி ரூபாவை ஒதுக்கிய சிறிலங்கா அரசாங்கம் 1992 ஆம் ஆண்டிற்கென 1530 கோடி ரூபாவை உயர்வாக ஒதுக்கியுள்ளது. சிறிலங்கா இறைமையுள்ள நாடு. அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது.ஆனால் வெளியாரின் நிதி உதவி எமக்குத் தேவை என்பது சிறிலங்காவின் நிலைப்பாடு.

இந் நிலையில் கடந்த காலத்தைப்போன்று இவ்வருடமும் பொருளாதார அபிவிருத்தி என்ற ரீதியில் நிதி உதவி சிறிலங்காவிற்கு வழங்கப்படுமானால். சிறிலங்கா அதனை தனது போர்த் தேவைக்குப் பயன்படுத்தும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. எடுத்துக்காட்டாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கென வழங்கப்பட்ட உதவிகளில் இருந்து பெறப்பட்ட இருநூறு வாகனங்கள் இராணுவத்தினர் தேவைக்கு வழங்கப்பட்டுள்ளதைக் கூறலாம்.

மேலும் இராணுவ நடவடிக்கைக்கு வாய்ப்பளிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படுமானால், அதில் மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதற்கும் வாய்ப்பில்லை. ஆகையினால், நிதி உதவி அளிப்பதென்பது இராணுவ நடவடிக்கைகளைத் தொடரவும், மனித உரிமை மீறல்கள் இடம் பெறவும் மேற்குலகம் அளிக்கும் உதவி என்றும் கொள்ளலாம்.

இந்நிலையில் இராணுவ நடவடிக்கையை கட்டுப்படுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் உதவி வழங்கும் மேற்குலகம் விரும்புமானால் முதலில் பொருளாதார உதவிகளை முற்றாக நிறுத்த வேண்டும். அப்பொழுது இராணுவ நடவடிக்கைகளும் நிற்கும், மனித உரிமை மீறல்களும் நிற்கும். இதைவிடுத்து எச்சரிக்கைகளையும், கண்டனங்களையும் பொருட்படுத்தக்கூடிய கண்ணியம் கொண்டதல்ல சிறிலங்கா அரசாங்கம்.

# கருங்கடற் கடற்படை; உக்ரெயினுக்கு உரியதல்ல

— பொரிஸ் யெல்சின்

(மொஸ்கோ)

கருங்கடலின்முக்கியத்துவம் வாய்ந்த கடற்படையின் கட்டுப்பாட்டை உக்ரெயின்வைத்துக் கொள்ள முடியாது என்று ரஷ்யாவின் ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் தெரிவித்துள்ளார்.

உக்ரெயினுக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டாம் என பொரிஸ் யெல்சின் கருங்கடல்பிராந்திய கடற்படையினரையும், அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இதற்கான உத்தரவுகளையும் யெல்சின் பிறப்பித்துள்ளார். இதன்படி கருங்கடல் பகுதியின் தளபதிகள் ரஷ்ய ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் செயல்படுவார்கள்

புதிய சுதந்திர பொதுநல அமைப்பு நாடுகள் அமைக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையினால் ரஷ்ய உக்ரெயின் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை மேலும் தீவிரம் அடைந்துள்ளது.

## பழிவாங்கும் நோக்கில் டடா சட்டபிரயோகம்

— அன்பழகன்

(சென்னை)

டடா சட்டம் செல்வி ஜெயலலிதா அரசால் பழிவாங்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுவதாகவும், அது பற்றிக் கூடி முடிவெடுக்கப்படும் என்று தி.மு.கவின் பொதுச்செயலர் க. அன்பழகன் அறிவித்தார்.

தி.மு. கழகத்தின் அவசர நிர்வாகக்கூட்டம் இன்றுஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது அக்கூட்டத்தில் டடா சட்டம் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

## விரும்பிய இடங்களுக்கு ஊழியர் இடமாற்றம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் தாங்கள் விரும்பும் அல்லது சொந்த இடங்களுக்கு சமீபமான அரச அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யும் வகையில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊழியர் மனத் திருப்தியோடு வேலை செய்வதற்காகவே இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும்.

ஆனால் சகலரையும் விரும்பிய இடத்திற்கு இடமாற்றுவதற்கு சாத்தியமாகாது என்றும், தற்போது 2,50,000அரச ஊழியர்கள் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## புஷ்ஷின் ஜப்பான் விஜயம் வெற்றியளிக்கவில்லை

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் ஜப்பானிய விஜயம் வெற்றியை தரவில்லை என நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க-ஜப்பான் வர்த்தகத்தில் ஜப்பானுக்கு சார்பாக இருக்கும் வருடாந்த சென்மதி நிலுவை 4100 கோடி டாலரை குறைக்க இவ் விஜயம் எவ்விதத்திலும் பயன் தரவில்லை என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

எனினும் தனது விஜயம் வெற்றியளித்துள்ளதாக புஷ் தெரிவித்தார்.

அவரின் அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கான 12 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்.

**பல இடங்களில்**

உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை உதவி அ. அ. பிரிவுகளிலுள்ளோருக்கு மு. பகல் 10. 30 மணிதொடக்கம் மு. பகல் 11. 30 மணிவரைக்கும் இருபாலை, கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் கரவெட்டி, பருத்தித்துறை உதவி அ. அ. பிரிவுகளிலுள்ளோருக்கு பி. பகல் 1. 00 மணி தொடக்கம் பி. பகல் 2. 00 மணிவரை நெல்லியடி மில்லர் மத்திய மகாவித்தியாலயத்திலும்பெறப்பட உள்ளது

கொடிகாமம்வட்டவைப்பிரதேசம், பச்சிலைப்பள்ளி உதவி அ. அ. பிரிவுகளில் உள்ளோருக்கு பி. பகல் 3. 00 மணி தொடக்கம் பி. பகல் 3. 30 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் சாவகச்சேரி, கைதடி வட்டவைப் பிரதேசத்திலுள்ளோருக்கு பி. பகல் 4. 00 மணிதொடக்கம் பி. பகல் 4. 30 மணிவரை மட்டுவில் சரஸ்வதி மகாவித்தியாலத்திலும் (நுணாவில் சந்திக்கு அருகாமையில்) பெறப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**கட்சியிலிருந்து**

கொலைச் சந்தேக நபர்களையும் அநுராபார்வையிடச் சென்ற செயலானது மிகவும் பாரதூரமானது எனவும் கட்சியின் சிரேஷ்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

**10 தமிழ்க்**

மூதூரிலுள்ள கட்டைபறிச்சான், சீனவெளி ஆகிய கிராமங்களும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் தற்பொழுது இராணுவ சுற்றிவளைப்பிற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆம் திகதி திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாலையூற்று கல்லடிப்பற்று மக்கள் அங்கிருந்து காடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

**இரகசியப்**

திற்காகவே இந்த இடைநீக்க உத்தரவு கடந்த செவ்வாய்க் கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பி. ரி. ஐ தெரிவித்தது.

விடுதலைப்புலிகளுக்குஉதவியதாகவும், தி. மு. கவுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் நெருக்கமான உறவு இருப்பதாகக் குற்றம் சுமத்தி தி. மு. கழக முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் ஏற்கனவே கைதான சம்பவம் யாவரும் அறிந்ததே.

இதேவேளை தமிழ் நாடு முன்னைநாள் உள்துறைச் செயலர் நாகராஜன் திருச்சியில் நீதிபதி முன்னிலையில் அளித்ததாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் திருமதி சுப்புலட்சுமியின் பெயருடன் ஐ.ஏ.எஸ் உயர் அதிகாரிகளின் பெயர்களையும், காவற்றுறை அதிகாரிகளின் பெயர்களையும் சம்பந்தப்படுத்தியுள்ளார்.

## 'சாளரம்' வெளிவந்தது

1992 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திற்குரிய சாளரம் இதழ் வெளிவந்துவிட்டது.

இந்த இதழில் சாரணனின் 'தென்னிலங்கை அரசியல் மாற்றமும் இனப்பிரச்சினையும்' என்னும் கட்டுரையும் மாதுங்கனின் 'போரும் அதன் சமூகப்பயன்பாடும்' என்னும் கட்டுரையும் இன்னும் மருத்துவ உளவியல் கட்டுரைகளும் வேறும் பல அம்சங்களும் உள்ளன.

## திருவாசக முற்றோதல்

தமிழ் மக்களிற்கு அமைதியும் சமாதானமும் வேண்டி நாளை திங்கட்கிழமை (13.1.92) சிறுபிட்டி சிவகாமி அம்மன் ஆலயத்தில் திருவாசகமுற்றோதல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சி காலை 8,00 மணிக்கு சிறுப்பிட்டி வடக்கு வைரவர் கோயிலிருந்து புறப்படும் எனவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபைத் தலைவர் கேட்டுள்ளார்.

## தங்ககடத்தலில் இரு இந்தியர் கைது

(கொழும்பு)

தங்கக் கட்டிகளை சிறிலங்காவிற்கு கடத்திவர முயன்ற இரு இந்திய இளைஞர்கள் சிறிலங்கா சுங்கப்பகுதியினரால் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இவர்களிடமிருந்து 928 கிராம் நிறையுள்ள 8 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன. பாத அணிக்குள் வைத்து இவற்றைக் கடத்த முயன்றனர்.

**ஆயுத**

லாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்றுமுன்தினம் செய்தியாளர் மத்தியில்பேசும்போது, முன்பு கட்டுப்பாடு இருந்தது. ஆனால் இப்போதெல்லாம் கட்டுப்பாடு கிடையாது என்ற போக்கில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுபற்றி பிரித்தானியத் தூதரக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், பிரித்தானிய அரசைப் பொறுத்த வரையில் சிறிலங்கா அரசுக்கு ஆயுதவிற்பனை தொடர்பான அதன் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும், ஏலவே விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுடன் மேலும் பல புதிய கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன என்றும்,

பிரித்தானியத் தூதுவர் டேவிட் கிளாஸ்சோன் சிறிலங்காவிலிருந்துவெளியேற்றப்படவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்ததைத்தொடர்ந்து பிரித்தானிய அரசு இந்தப் புதிய கட்டுப்பாடுகளை விதித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

**தேசத்தின்**

யாவும் தீர்க்கப்பட்டு தமிழ் மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படுவதுடன் இந்நாட்டின் இறைமையையும் பாதுகாப்பதற்கு சகல இனமக்களும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்

துருக்கியில் இருந்து பாகிஸ்தான்வரை

# அணுவாயுத திறன் கொண்ட இஸ்லாமிய சமஷ்டி

## அமெரிக்க செனட்டர் எச்சரிக்கை

'பிறஸ்லர்' திருத்தத்தை' இந்தியாவுக்கு விஸ்தரித்து, அணுவாயுதப் பிரச்சினையால் அமெரிக்க உதவியை இந்தியாவுக்கு மறுக்கவேண்டிய தேவையில்லை என்று அமெரிக்க றிப்பப்ளிக்கன் செனேட்டர் லாரி பிரஸ்லர் தெரிவித்தார்.

நேற்றுப்புதுடில்லியில்செய்தியாளரிடம் பேசிய பிரஸ்லர், துருக்கி தொடக்சம் பாகிஸ்தான் வரை அணுவாயுதத் திறனாற்றல் கொண்டதும், வளவாய்ப்பும் உள்ளதான அடிப்படைவாத இஸ்லாமிய சமஷ்டி ஒன்று உருவெடுப்பதற்கு எதிராக இந்தியாவை எச்சரித்தார்.

பாகிஸ்தான் உட்படஒன்பது இஸ்லாமிய நாடுகள் மற்றும் முன்னாளய சோவியத் யூனியனின் ஐந்து ஆசியக் குடியரசுகளைக் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்குப் பிரச்சினையைத்தோற்றுவிக்கும் ஒரு முக்கியமான பாரிய சக்தியாக உருவெடுத்திடலாம் என்றும் தெரிவித்தார்.

மேலும், பாகிஸ்தான் ஒரு அணுவாயுத வல்லரசாக உருப்பெறுவதிலிருந்து அதனைத் தடுத்திட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியபிரஸ்லர் தெற்காசியாவை ஒரு அணுவாயுத விலக்கல் பிராந்தியமாக ஆக்கிடச் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என்ற இந்திய அரசின் உறுதி மொழியையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

'எயர்லங்கா' விமானத்தில்

## இயந்திரக் கோளாறு; சென்னையில் தரையிறக்கம்

(சென்னை)

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட எயர் லங்கா விமானம் ஒன்று எஞ்சினில் ஏற்பட்ட கோளாறை அடுத்து சென்னை சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதையில் அவசரமாக தரை இறங்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் இச்சம்பவத்தில் எந்தவித உயிராபத்தும் பயணிகளுக்கு ஏற்படவில்லை சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாக 'எயர் லங்கா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச் சந்தியில் வ. சுதன் என்பவரால் சிறு தொகைப் பணத்துடன் பெண்களின் மணிபேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## விசர் நாய் கடிக்கு வவுனியாவில் சிகிச்சை

### இல. செஞ்சிலுவை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடி தடுப்புச் சிகிச்சை வழங்குவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மேற்படி ஊசிமருந்துச் சிகிச்சை தேவைப்படுபவர்களை வவுனியாவிற்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பதற்கு முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலாவது தொகுதி நோயாளர்கள் நாளையதினம் வவுனியாவுக்குப் புறப்பட்டுச் செல்லஇருக்கின்றனர். சிகிச்சை பெற விரும்புபவர்கள் உடனடியாக தமது பிரிவு செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். (14)

## நியாய விலையில் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ப. நோ. கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் தலைமையில் நேற்றுக் கூடிக் கப்பலில் கொண்டுவந்த பின்வரும் பொருள்களை இன்றுதொடக்கம் குறைந்த விலைக்கு பங்கீட்டு அடிப்படையில் விற்பதென தீர்மானித்துள்ளார்கள்

சர்க்கரை - கிலோ 38 ரூபா
பயறு - கிலோ 34 ரூபா
ரயர் - ஒன்று 125 ரூபா
ரியூப் - ஒன்று 50 ரூபா

பாடசாலைக் கொப்பி வகைகள் கொழும்பில் விற்கப்படும் சில்லறை விலை.

## குடியகல்வு, குடிவரவு; சுதந்திர சட்டப் பிரிவு

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளியே செல்வோரும், நாட்டிற்குள் வருவோரும் புரியும் கிரிமினல் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதையடுத்து குடியகல்வு குடிவரவுத் திணைக்களம் சுதந்திரமான சட்டப் பிரிவு ஒன்றை நிறுவ முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் குற்றச் செயல்களுக்காக இச்சட்டத்தில் ஏற்படுத்திய திருத்தத்தினைத் தொடர்ந்து தற்பொழுது தண்டப்பணமாக அறவிடப்படும் 5,000 ரூபா 50,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 2 வருடங்களாக இருந்துவந்த சிறைத் தண்டனை ஐந்து வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பணியாளர் கௌரவிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களைக் கௌரவிக்கும் வைபவம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இன்று பிற்பகல் 2·00 மணியளவில் சங்க தலைமைக் காரியாலயத்தில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது.

## குருநகர் மக்கள் ஆலயங்களில் தஞ்சம்

(குருநகர்)

நேற்று முன்தினம் (10-1-92) மாலை மண்டைதீவில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் குருநகர் பகுதிக்கு ஏவிய எறிகணை தாக்குதலை அடுத்து குருநகர் பகுதி மக்கள் பீதி காரணமாக ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதேவேளை குருநகர் கடற்கரையோரக் குடியிருப்பு மக்கள் தொடர்ந்தும் அங்கே குடியிருக்க அஞ்சியவர்களாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்வதையும் காண முடிகிறது. (21)

### வீரச்சாவு

வெட்டை) ஆகிய இரு வீர வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### இராஜன்

நேற்று முன்தினம் மாலை தவறுதலாக நடந்த வெடிவிபத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவு அடைந்தார். இராஜன் (முன்னைக்காடு) என்ற ஆதரவாளருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### ஆசிரியர்களுக்கு

குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஆசிரியர்களைச் சிபார்சுசெய்யுமாறு யாழ். கல்வித் திணைக்களம் அனைத்துக் கோட்டக் கல்விப் பொறுப்பதிகாரிகளையும் கடிதமூலம் கேட்டுள்ளது.

### துவேசத்தை

சர் தொண்டமானையும், விடுதலைப் புலிகளையும் சம்பந்தப்படுத்தியும் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளுக்கு பெரும்பாலும் காமினி ஜெயசூரியா ஆரம்பித்துள்ளசிங்கள மக்கள் நலன் காப்பாற்றும் இயக்கமே காரணம் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை இந்தஇயக்கத்தின் தலைவர் காமினி ஜெயசூரியா, அமைச்சர் தொண்டமானின் திட்டத்தை எதிர்ப்பவர்களை ஒன்று சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளார்.

இவர்களின் கூட்டம் ஒன்று இன்று கம்பஹா மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இதில் பல புத்தபிக்குகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்திற்கு பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

## ஆரியரெட்னாவிற்கெதிராக ஊழியர்கள் குற்றச்சாட்டு

கோடிக்கணக்கான பணத்தை வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொண்டு பொறுப்புக்களை தமது உறவினர்களுக்கு வழங்கியுள்ளதாக சர்வோதயத் தலைவர் திரு. ஆரியரட்ண மீது தென்னிலங்கையில் சர்வோதய ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சர்வோதயத்தில் வேலைசெய்யும் ஊழியர்கள் சார்பில் பிரேமரட்ண விஜயதுங்க என்பவரால் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இது தொடர்பாக கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் சர்வோதய இயக்கத்தை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சிறிலங்காசுதந்திரக்கட்சியும், லலித்-காமினி குழுவினரும் ஒன்றிணைந்து மாபெரும் அரச எதிர்ப்பு ஊர்வலம்ஒன்றை நடாத்தவுள்ளனர். அதிகாரத்துஷ்பிரயோகம், மனிதஉரிமைமீறல், பொருளாதாரச்சீர்கேடுஎன்பவற்றைஎதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

## "வலிவடக்கை புனரமைக்க 15வருடங்கள் தேவை

''வலி வடக்கில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்கள் முற்றாகச் சிதைக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதிகளை மீளவும் புனரமைப்பதற்கு பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி தேவைப்படும்''. இவ்வாறுமேற்படி பகுதிகளை நேரடியாக பார்வையிட்டஅரச அதிகாரி ஒருவர்அதிர்ச்சி தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளில் காணப்பட்ட பொது மக்களின் வீடுகள், ஆலயங்கள், பொதுஸ்தாபனக் கட்டடங்கள் உட்பட அனைத்துக் கட்டிடங்களும் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளில் காணப்பட்டதளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன அல்லது சூறைபாடப்பட்டிருக்கின்றன. வீதியோரமதில்கள் அனைத்தும் உடைக்கப்பட்டு வெட்டவெளியாககாட்சி அளிக்கின்றது என்றும்இப்பகுதிகளை மீண்டும் பழைய நிலைக்கு புனரமைப்பதற்குசுமார் பதினைந்து வருடங்களிற்கு மேற்பட்டகாலப் பகுதி தேவையாக இருக்கும் என்றும்அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (க,ச)

## தென் ஆபிரிக்கா மீது பொருளாதார தடை நீக்கம்

(லிஸ்பன்)

தென் ஆபிரிக்கா மீதான அனைத்து பொருளாதார தடைகளை (ஆயுத விநியோகம் தவிர்ந்த) நீக்கப்போவதாக ஐரோப்பிய சமூகம் அறிவித்துள்ளது.

இந்த அமைப்பின் அமைச்சர்கள் சபையின் தலைவரான போர்த்துக்கேய வெளியுறவுத்துறை அமைச்சர் கெயேரோ இதனைத் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை அடுத்து இந்த தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும்,

## பாலஸ்தீன தளங்கள்மீது இஸ்ரேல் விமானத் தாக்கு

(பெய்ரூட்)

பெய்ரூட்டின் தென்பகுதியிலுள்ள பாலஸ்தீன கெரில்லா தளங்களை இலக்காகக் கொண்டு இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.

இத்தாக்குதலில் 5 பெண்கள் 4 சிறுவர்கள் உட்பட 15 பேர் பலியாகியுள்ளனர். 11 பேர் காயமடைந்தனர்.

தமது வீரர்கள் எவரும் குண்டுவீச்சால் பாதிக்கப்படவில்லை என கெரில்லா குழு தலைவர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு சமாதான மாநாடு நடந்துவரும் இவ்வேளையில் இக்குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது.

யாழ். கல்வித்திணைக்களம்

## இடமாற்றச் சபை 17 ஆம் திகதி கூடுகிறது

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் கோட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்களை ஆராய்வதற்கு ஆசிரியர் இடமாற்றச்சபை வரும் 17 ஆம் திகதி யாழ். கல்வித்திணைக்களத்தில் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் தலைமையில் கூடவுள்ளது.

சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களும் தத்தம் பிரிவு ஆசிரிய இடமாற்றத்திற்குரிய ஆசிரியர்களின் பெயர்களை ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேசக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிமனை அறிவித்துள்ளது.

இவ் இடமாற்றச் சபையில் கோட்டக் கல்விப் பொறுப்பதிகாரிகளும் சமுகமளிக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இடமாற்றச் சபையில் அங்கம் வகிப்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இப்பத்திரி யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.